The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY :

S. GOPALAN, B. A., B. L.,
Honorary Secretary, T. M. S. S. M. Library,
TANJORE.

Vol XI

No. 2

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

1957

Annual Subscription Rs. 4.

CONTENTS

No.		Pages
1.	Editorial	
2.	"பகவன்" —நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர், மீமாம்ஸா சிரோமணி	1–15
3.	The Bēdi Ānjanēya at Tirumalai —Sri A. Balasubrahmanyan, Tiruppati.	16–18
4.	Saṅgīta Makarandam — Nṛtyādhyāya by Vēdasūri —Sri K. Vasudeva Sastri, B. A.	19–22
5.	श्रीमद्भगवद्गीता – माधवस्वामिकृत मराठीभाषान्तर (एकादशाध्यायस्य भागः द्वादशत्रयोदशाध्यायौ च) —Sri G. Nagaraja Rao	108–139
6	वैयाकरणसिद्धान्तकौमुदी—भट्टोजिदीक्षितकृता An Analysis in English by the late Sri P. V. Naganatha Sastri, (continued from Vol. IX No. 3) —Sri N. S. Devanathachariar, Meemamsa S'iromani	51–66
7.	போகர் நிகண்டு அட்டவணை (அகராதியுடன்) —Dr. S. Venkatarajan L. I. M. (Regd.)	6+1–34
8.	पारिजातनाटकस्योपोद्घातः —Sri N. S. Devanathachariar, Meemamsa S'iromani	9–12
9.	Our Exchanges	1—2

// THE JOURNAL OF
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY.

Vol. XI. 1957 No. 2

EDITORIAL

Our apology is due to the readers for the delay in bringing out this issue, which was occasioned by causes beyond our control.

The new articles in this issue are:—

1. A Tamil contribution on the interpretation of the word "பகவன்" in the first Kural and
2. "Bedi Ānjanēya" or "the Ānjanēya in manacles" who stands before the deity in Tirumalai Hills.
3. The Serial publication of the Medical Lexicon of Bhogar with Index.

The Serial of the English version of Siddhāntha Kaumudi by the late Sri P. V. Naganatha Sastri, has been resumed in this issue. The other serials have been continued.

S. GOPALAN,
Editor.

Statement about ownership and other particulars about newspaper JOURNAL OF THE TANJORE SARASVATI MAHAL LIBRARY to be published in the first issue every year after the last day of February.

FORM IV

(See Rule 8)

1.	Place of Publication	Tanjore.
2.	Periodicity of its publication	Three issues in a year.
3.	Printer's Name	Sri S. N. Panchanada Iyer.
	Nationality	Indian.
	Address	Managing Director, Sri Vani Vilas Syndicate Ltd., SRIRANGAM. Tiruchirapalli-6.
4.	Publisher's Name	Sri S. Gopalan,
	Nationality	Indian
	Address	Honorary Secretary, T, M. S. S. M. Library, Tanjore.
5.	Editor's Name	Sri S. Gopalan,
	Nationality	Indian,
	Address	Honorary Secretary, T. M. S. S. M. Library, Tanjore.
6.	Names and address of individuals who own the newspaper and partners or share-holders holding more than one percent of the total capital.	The Administrative Committee of the T. M. S. S. M. Library, Tanjore.

I, S. Gopalan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 25th Feb. 1957.

S. GOPALAN,
Signature of Publisher.

ஸ்ரீ:

பகவன்

நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்,
வித்வான், ஸரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

"அகரமுதல வெழுத் தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு"

தமிழ் மறையாகிய திருக்குறளின் முதற்குறள் இது. இம்மண்ணுலகினர் துன்பங்கள் நீங்கி இன்பமயமான அமரவாழ்வு வாழ்வதற்கென 1330 குறட் பாக்களாகிய அமுதமழையைப் பொழிந்த திருவள்ளுவரெனும் கார்முகிலின் வள்ளுறையாகிய இது, எல்லாவிதத்தாலும் அடுத்தாற்போல்வரும் குறள் களுக்கு, ஏன்? உலகிலுள்ள நூல்கள் யாவற்றிற்குமே முதன்மையாக அமையும் பெருமைவாய்ந்ததெனில் மிகையாகாது. தெய்வத்தமிழ்மறையின் வேர்போன்ற இக் குறளில்; உலகுக்கெல்லாம் தனி முதல்வனுகிய இறைவனும், (பகவனும்) [1] சப்தஜாலங்களுக்கெல்லாம் வித்தாகியதும் அவ்விறைவனை யுணர்த்தும் சக்தி வாய்ந்ததுமான அகரமும் இன்றியமையாதவாறு இடம் பெற்றுள்ளமையின் இது மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது. சொல்–பொருள் (நாம–ரூப) என்று இரு கூறுகப்பிரிக்கப்படும் உலகத்தில், எல்லாப்பொருள்களையும் படைத்துக் காத்து அழித்து, அவைகளைத் தன் திருமேனியிலேயே தரித்து நிற்கும் இறைவன் உலகிற்கெல்லாம் முதல் தனி வித்தாகத் திகழ்பவன். எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதன்மை பெற்றது. பொருள்களில் முதன்மையான பகவனுக்கேற்ற சொல், சொற்களில் முதன்மையான அகரமேயல்லவா? [2] 'अक्षराणामकारोऽस्मि' (அக்ஷ ராணுமகாரோஸ்மி) என்னும் பகவானுடைய பொன்மொழியின் உட்கருத்து இதுவேயன்றோ? இக்குறளில் இடம்பெற்றுள்ள 'பகவன்' என்னும் சொல், அதன் பொருளான இறைவனைப்போலவே விசித்திரமான சக்தி வாய்ந்தது. இதிலுள்ள சில விசேஷங்களை ஈண்டு விளக்குவோம்.

பரிமேலழகர் இக்குறளை 'ஏற்புடைக்கடவுள் வாழ்த்து' எனக்கூறி யுள்ளார். 'ஏற்புடைக்கடவுள் = ஏற்பு–உடை–கடவுள். ஏற்பு = தகுதி. அதாவது:– நூலாசிரியர், தாம் இயற்றப்போகும் நூலின் பொருளுக்கேற்ப, நூன்முகத்தில் கடவுள் வாழ்த்துக்கூறுதல்" என்பது இதன் பொருள். [3] முப்பால்

---

1. சப்த ஜாலங்கள் = சொற்கூட்டங்கள்.
2. 'எழுத்துக்களுள் (நான்) அகரமாக இருக்கிறேன்' என்பது இதன் கருத்து.
3. முப்பால்கள் = அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன.

களைப் பேசும் நூலாகிய திருக்குறளுக்கு, [1] மும்மூர்த்திகளும் ஏற்புடையவர்களே. ஸத்துவம்–ரஜஸ்–தமஸ்–எனப் பிரபஞ்சத்தின் மூலகாரணமாகிய குணங்கள் மூன்று. அவற்றுள் ஸத்துவத்தால் அறம் தோன்றுகிறது: ரஜோ குணத்தால் பொருளும், தமஸ்ஸினால் இன்பமும் தோன்றுகின்றன. அயன்–அரி–அரன், எனப்படும் மும்மூர்த்திகளும் முறையே மேற்கூறப்பட்ட முக்குணங்களாலான முப்பாலுக்கும் ஏற்ற கடவுளாயமைந்தமையின், அம்மூவரையும் 'பகவன்' என்னும் ஒரே சொல்லால் குறிப்பிட்டு ஈண்டு வாழ்த்துக் கூறப்பட்டது. முழு முதற்கடவுளாகிய இறைவனை 'பகவன்' என்னும் சொல்லால் குறிப்பிட்டு வாழ்த்துக் கூறியது; ஸத்துவ முதலிய முக்குணங்களால் [2] மும்மூர்த்திகளாகத் தோற்றமளிக்கும் அவனது இயல்பை முன்னிட்டு மும்மூர்த்திகட்கும் கூறப்பட்ட வாழ்த்தாகக் கொள்ளப்பட்டது. 'இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரெனவுணர்க" என்னும் உரைப்பகுதியினின்றும் இக் கருத்தை நன்குணரலாம்.

---

1. மும்மூர்த்திகள் = அயன், அரி, அரன் இவர்கள்.

2. ஸ்ரீவிஷ்ணு புராணம்-முதல் அம்சம்-4வது அத்தியாயத்தில் இவ்விஷயம் நன்கு எடுத்துரைக்கப்பெற்றுளது. ஆங்குள்ள சில சுலோகங்களும் அவற்றின் கருத்தும் வருமாறு:–

(மூ) मैत्रेयः — ब्रह्मा नारायणाख्योऽसौ कल्पादौ भगवान्यथा ।

ससर्ज सर्वभूतानि तदाचक्ष्व महामुने! ॥ १ ॥

(கருத்து) மைத்ரேயர் கேட்கிறார்—'முனிவர்களுள் சிறந்தவரே! ஊழி முதலில் பரம் பொருளாகிய நாராயணன் என்னும் ப்ரம்மா (பிரமன்) எல்லாப்பொருள்களையும் எவ்வாறு படைத்தார்? இதை எனக்குச் சொல்லவேணும்.

(மூ) पराशरः — अतीतकल्पावसाने निशासुप्तोत्थितः प्रभुः ।

सत्त्वोद्रिक्तस्तथा ब्रह्मा शून्यं लोकमवैक्षत ॥ ३ ॥

(கருத்து) பாராசர் சொல்கிறார்—கடந்த கல்பத்தின் (ஊழியின்) முடிவில் உறக்கத்தினின்றும் விழித்தெழுந்த ஸ்வதந்த்ரரான பிரமன் ஸத்வ குணம் மேலிட்டிருந்தார். எங்கும் ஒன்றுமில்லாமல் சூனியமாக இருந்ததைக் கண்டார்.

(மூ) पृथिवी — नमस्ते पुण्डरीकाक्ष! शंखचक्रगदाधर! ।

....

नमस्ते परमात्मात्मन्पुरुषात्मन्नमोऽस्तु ते ।

प्रधानव्यक्तभूताय कालभूताय ते नमः ॥ १४ ॥

त्वं कर्ता सर्वभूतानां त्वं पाता त्वं विनाशकृत् ।

सर्गादिषु प्रभो! ब्रह्मविष्णुरुद्रात्मरूपधृक् ॥ १५ ॥

"ஆதிபகவ" னென்னு மிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிபு" என்னும் உரைப்பகுதி, "பகவன்" என்னும் சொல் ஸம்ஸ்க்ருத பதம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அது தமிழ்ச்சொல்லாக இருப்பின் "ஆதிப் பகவன்" என்று வல்லொற்று மிக வேண்டியிருக்கும். அவ்வாறு வல்லொற்று மிகாது இயல்பாகவே உள்ளமையின் இது வடமொழிச் சொல்லென்பது தெளிவு. आदिभगव: (ஆதிபகவன்) என்று வடமொழியுச்சரிப்பில் இப்பகுதி அமைந்துள்ளது என்ருயிற்று. இதனுல் வல்லொற்று மிகாதொழிந்தமைக்கு ஒரு காரணம் காட்டினுராயிற்று. அவ்வளவேயன்றி இச்சொல் ஸம்ஸ்க்ருதம் அல்லது தமிழ் இவைகளுள் எம்மொழியைச் சார்ந்ததாகக் கொள்ளப்படினும் பொருளில் சிறிதும் வேறுபாடில்லை. ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் உள்ள பல இலக்கண இலக்கியங்களை ஆராய்ந்து இக்கருத்தை உறுதிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம். முந்துறமுன்னம் சொல்லின் ஒற்றுமையைக் கவனித்து, பிறகு பொருளொற்றுமையை விளக்குவாம்.

भग: = **பகன்** ; भगव: = **பகவன்** ; भगवान् = **பகவான்**. இம்மூன்று சொற்களும் ஒரே பொருளுள்ளவை. அதாவது:—"பகவன்" (भगव:) என்னும் சொல் எதை யுணர்த்துகிறதோ அதையே "பகன்" (भग:); "பகவான்" (भगवान्) என்னும் சொற்களும் உணர்த்துகின்றன. [1] "भग एव भगवाँऽअस्तु देवा:" (பக ஏவ பகவான் அஸ்து தேவா:) [2] "श्रेष्ठो देवानां भगवो भगासि" (ச்ரேஷ்டோ தேவாநாம் பகவோ பகாஸி) என்னும் வேத வாக்கியங்கள் இரண்டும் மேற்கூறிய கருத்தைத் தருகின்றன. முந்திய வாக்கியம், 'பகன்' எனப்படுபவனே 'பகவான்' என்கிறது. பிந்தியது, "பகவன்" "பகன்" என்னும் இரு சொற்களாலும், [3] தேவர்களுள் சிறந்தவனுகிய இறைவனை விளித்துச் சொல்கிறது. இவற்றிலிருந்து, 'பகவன்' எனப்படுபவன் தேவர்களுள் சிறந்தவனென்றும் (பரம்பொருளென்றும்) அவனே 'பகன்' 'பகவான்' என்பதும் ஐயந்திரிபற அறுதியிடப்பட்டன. ஸம்ஸ்க்ருதத்தில் அகர ஈற்றுச் சொற்களின் முதல் வேற்றுமையுருபு (ஒருமை)க்கு ':' (ஸ்) (விஸர்க்கம்) விகுதியாக அமைந்துள்ளது. தமிழில் 'அன்' என்பது

(கருத்து) பூமிதேவி வாரகப்பெருமானைத் துதிக்கிறுள் "செந்தாமரைக் கண்ணு! சங்கு சக்கரம்-கதை-இவற்றைத் தரிப்பவனே! உம்மை வணங்குகிறேன் ... ... பரம்பொருளாகிய உமக்கு வணக்கம். புருஷவடிவமாகிய உமக்கு வணக்கம். மூலப்பிரகிருதி வடிவமாகவும், காலவடிவமாகவும் உள்ள உமக்கு வணக்கம். எல்லாவுலகுகளையும் படைப்பவர் நீர்தான். காப்பவரும் அழிப்பவரும் நீரே. படைத்தல்-காத்தல்-அழித்தல்-இவற்றில் முறையே பிரமன்-விஷ்ணு-ருத்திரன்-என்னும் வடிவங்களைத் தரிக்கிறீர்.

1. ருக்வேதம் 10-வது மண்டலம், 68வது ஸூக்தம், 2வது ருக் (செய்யுள்).
2. க்ருஷ்ணயஜுர்வேதம். 3வது அஷ்டகம், 1வது பிரச்னம், 1வது அனுவாகம்.
3. 'மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ' (நம்மாழ்வார்) திருவாய்மொழி.

அவ்விகுதியாக அமைந்துள்ளது. அதனால் இம்மூன்று சொற்களின் ஒற்றுமையை எளிதில் அறியலாம்.

(ஸம்ஸ்க்ருதம்)	(தமிழ்)
रामः (ராமः)	இராமன்
गोविन्दः (கோவிந்தः)	கோவிந்தன்
भगः (பகः)	பகன்
भगवः (பகவः)	பகவன்
[1] भगवान् (பகவான்)	பகவான்

இது போன்ற உதாஹரணங்களை நோக்குக.

இலக்கணம்.

இனி ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் இச்சொல்லின் பகுதி விகுதிகளைக் கவனிப்போம். ஸம்ஸ்க்ருதத்தில் 'भज सेवायां' (பஜ ஸேவாயாம்) என்பது இச்சொல்லின் பகுதி. இதன்மேல் '[2] पुंसि संज्ञायां घः प्रायेण' (பும்ஸி ஸம்ஜ்ஞாயாம் கः ப்ராயேண) என்னும் ஸூத்திரத்தினால் 'घ' (க) என்னும் விகுதி வரும். இதில் 'घ्' (க்) என்னும் மெய் லோபமடையும் (கெடும்). भज् + अ = भज என்றாகும். भज् (பஜ்) என்னும் பகுதியில் ஈற்றெழுத்தாகிய 'ஜ்' '[3] चजोः कुघिण्यतोः' (சஜோः குகிண்யதோः) என்னும் ஸூத்திரத்தினால் ग् (க்) ஆக மாறும். அதனால் 'भग' (பக) என்னும் சொல் தேறும். இதில் முதல்வேற்றுமையொருமை விகுதியாகிய (ஸ்) ':' என்னும் விஸர்க்கத்தைச் சேர்த்தால் 'भगः' (பகः) என்னும் சொல் உருவாகும். 'ஸேவிக்கத் தகுந்தவன்' 'அடையத் தகுந்தவன்' என்று பொருள்படும் இச்சொல். இதையே ஒன்றன்பாலாகவும் கொள்ளலாம். அப்பொழுது 'भगम्' (பகம்) என்று சொல்லின் உருவம் இருக்கும். அதற்கும் மேற்சொன்ன பொருளேதான். ஆனால் ஒன்றன்பாலானமைபற்றி அச்சொல், 'செல்வம்' 'அறிவு' 'வைராக்கியம்' (அவாவறுத்தல்) 'ஐசுவரியம்' இதுபோன்ற பொருள்களை 'அடையத்தகுந்தது' என்ற பகுதியின் பொருளுக்குத் தக்கவிதத்தில் உணர்த்தும். 'भगवः' (பகவः) 'भगवान्' (பகவான்) என்னும் சொற்களும் மேற்கூறிய 'ஐசுவரியம்' 'வீரியம்' 'அறிவு' முதலியவற்றை **உடையவன்** என்கிற கருத்தையே தெரிவிக்கும். '**தனவான்**' '**தான்யவான்**' என்னுமிடங்களிற்போல் 'वान्' (வான்) என்னும் விகுதி '**உடையவன்**' என்னும் கருத்தையுணர்த்தும். 'எல்லோராலும் அடையத் தகுந்தவன்' 'எல்லோருக்கும் ஸேவிக்கத் தகுந்தவன்' 'எல்லையற்ற ஐசுவரியம் முதலியவற்றையுடையவன்' என்று இவ்

---

1. இது மெய்யீற்றுச் சொல் விகுதியாகவின், ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் எவ்வித மாறுபாடும் இல்லாமலே காணப்படுகின்றது.

2. அஷ்டாத்யாயீ 3-3-118.

3. ,, 7-3-52.

வாருகவெல்லாம் இறைவனொருவனே இருத்தலின் இச்சொற்கள் அவனையே யுணர்த்தும். பக்தி மிகுதியால்—ஆசாரியனையும், அறிவிற்சிறந்த மற்றவர்களை யும் சில சமயங்களில் இச்சொல்லால் வழங்குவதுண்டு. ஆனால், அது முக்கிய மானதல்ல. 'அவர்கள் கடவுளுக்குச் சமானம்' என்பதைத்தான் அவ்வழக்கம் எடுத்துக்காட்டும். அவ்வளவேயன்றி 'பகவன்' 'பகவான்' என்னும் சொற் கள் பல பொருளுடையனவல்ல.

தமிழில் 'பகவன்' என்னும் சொல் 'பகு' என்னும் பகுதியினின்றும் தோன்றுவதாகும். 'பகு' என்னும் பகுதிக்குப் 'பகுத்தல்' 'பிரித்தல்' 'பங்கு போடுதல்' என்பன போன்ற பொருள்கள் உள்ளன. 'பகுபதம்—பகாப்பதம், பகுத்தறிவு — பகுத்துண்ணுதல்—என்னும் வழக்குச் சொற்களைக் காண்க. [1] 'பகவு' என்னும் சொல் 'பகுத்தல்' என்னும் பொருளுடையது. பகவு + அன் = பகவன் என்று தேறுகின்றது. 'பிரிப்பவன்—பங்குபோடுபவன்— என்பது இச் சொல்லின் பொருளாகும். சாதாரணமாக இப்பொருளை நோக்கின், இப்பெயர் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு யாவரையும் குறிக்கவல்லதாகவே தோன் றும். ஆனால், இக்குறளில் 'பகவன்' என்னும் சொல்லுக்கு 'ஆதி' என்னும் அடைமொழி அமைந்துள்ளமையின், உலகம் தோன்றுவதற்கு முன்பே எழுந் தருளியிருந்த இறைவனையே இச்சொல் முக்கியமாகவுணர்த்தவல்லது. அவனையும் 'பகுப்பவன்' பிரிப்பவன்—பங்குபோடுபவன்—என்னும் கருத்திலேயே உணர்த்து கின்றது. ஊழிமுதல்வனாகிய இறைவனும் முதன் முதலாக இத்தொழிலையே செய்யவேண்டுவது இன்றியமையாததல்லவா? ஸகல சேதனாசேதனங்களும் (சேதனங்கள்—உயிர்கள்—ஆத்துமாக்கள். அசேதனங்கள் — ஜடப்பொருள் கள்) ஒன்றாய்க்கலந்து விடுகின்றன மகாப்பிரளய காலத்தில். அதுவே 'மூலப் பிரகிருதி' பிரகிருதி, பாழ், அவ்யக்தம், தமஸ், அவ்யாக்ருதம், என்றெல்லாம் வழங்கப்படுவது. உலகத்தை மீண்டும் தோற்றுவிக்க விரும்பும் கடவுள், அந்த அகண்டமான மூலப்பிரகிருதியினின்றும் ஒரு பகுதியை முந்துற முன்னம் தனிப் படுத்தியாக வேண்டும். அதிலும், ஒன்றுக்குள் ஒன்றாக உருமாறி லயித்துக் கிடக்கும் ஐம்பூதங்களையும், உயிர்களையும், ஐம்பொறிகளையும், இதுபோன்ற எண்ணற்ற பொருள்களையும் அதனதன் இயற்கையான தன்மையுடன் தனித் தனியாகப் பிரிக்கவேண்டும். பிறகு, இந்த ஊழியில் தோன்றப்போகிற கோடிக் கணக்கான உயிர்களின் முன்னை வினை வகைகளைப் பகுத்தறிந்து அதற்கேற்ப அவர்களைப் பல்வேறு யோனிகளில் தோற்றுவிக்கவேண்டும். அசித்தாகிய ஜடப் பொருளின் பல்வேறு பகுதிகளை அவரவர்களுக்கேற்றவாறு பகுத்துத்தர வேண்டும். இவ்வளவும் செய்த பிறகுங்கூட அவனுக்கு ஓய்வில்லை. இவைகள்

1. "எட்பகவன்ன ... ..." திருக்குறள்—889.

ஒன்றோடொன்று கலந்து, தம்தம் தன்மை குன்றிவிடாதவாறு அவற்றைத் தனித்தனியே தம்தம் இயல்புடன் திகழுமாறு நிலைநிறுத்தி வைக்கவேண்டும். இதற்காக இறைவன் என்ன செய்கிறான்? தன்னையே பலகோடி நூறாயிரம் வடிவங்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு உயிர்க்குள்ளும் நுழைந்து அதனுடன் ஜடப்பொருள்களிலும் உட்புகுந்து சர்வவியாபியாய்த் திகழ்கிறான். இவ்வளவு பாகுபாடுகள் செய்பவனைப் 'பகவன்' என்னத்தடை யாது? இறைவனே '**ஆதிபகவன்**'.

இவ்வாறு மூலப்பிரகிருதி முதலான பொருள்களைப் பகுப்பதற்கு, அதற்கேற்ற ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, அறிவு, வைராக்கியம், இவை அளவற்றனவாக இருந்தாலல்லது முடியாது. இறைவனிடம் அவை ஆறும் அளவிட முடியாதபடி நிறைந்திருக்கின்றன. இவ்வாறு குணங்களுக்கும் ஸம்ஸ்க்ருதத்தில் 'பகம்' (भगम्) என்று பெயர். அவற்றை 'உடையவன்' என்னும் பொருளில் 'வான்' (वान्) என்னும் விகுதியைச் சேர்த்து 'பகவான்' (भगवान्) என்னும் சொல்லால் கடவுளை வழங்கி வருகின்றனர்.

[1] ऐश्वर्यस्य समग्रस्य वीर्यस्य यशसश्श्रियः ।
ज्ञानवैराग्ययोश्चैव षण्णां भग इतीरणा ॥

(ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸச்ச்ரிய: ।
ஜ்ஞானவைராக்யயோச்சைவ ஷண்ணாம் பக இதீரணா ॥)

என்னும் சுலோகம் ௸ கருத்தையே விவரிக்கிறது.

[2] ज्ञानशक्तिबलैश्वर्यवीर्यतेजांस्यशेषतः ।
भगवच्छब्दवाच्यानि विना हेयैर्गुणादिभिः ॥

(ஜ்ஞானசக்திபலைச்வர்யவீர்யதேஜாம்ஸ்யசேஷத: ।
பகவச்சப்தவாச்யானி விநா ஹேயைர்குணாதிபி: ॥)

ஜ்ஞானம் – சக்தி – பலம் – ஐசுவரியம் – வீரியம் – தேஜஸ் – இவையெல்லாம் குறைவற்றிருப்பின் அவற்றிற்கு 'பகம்' என்று பெயர். இவற்றை உடையவன் பகவான். 'தீய குணங்களின்றி ௸ ஆறு குணங்களையுடையவன்' என்பதே 'பகவான்' என்னும் சொல்லின் பொருள், என்று மேற்சொன்ன சுலோகத்தின் கருத்து. [3] 'பற்றுதலில்லாத – அளவிடவொண்ணாத ஐசுவரியமுள்ள – முழுமுதற்

1. ஸ்ரீ விஷ்ணுபுராணம் 6வது அம்சம், 5வது அத்தியாயம் 74வது சுலோகம்.
2. ,, ,, ,, 79 ,, ,,
3. शुद्धे महाविभूत्याख्ये परे ब्रह्मणि वर्तते ।
मैत्रेय भगवच्छब्दः सर्वकारणकारणे ॥

ஸ்ரீ விஷ்ணு புராணம்—6வது அம்சம், 5வது அத்தியாயம், 72வது சுலோகம்.

கடவுளாகிய பரப்பிரம்மத்தையே 'பகவான்' என்னும் சொல் உணர்த்தும்.

ஸ்ரீ விஷ்ணு புராணம்

'பகவான்' என்னும் சொல்லில் அடங்கிய 'ப' 'க' 'வ' 'ன்' என்னும் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு பொருளுண்டு. அப்படியே முதலிரண்டு எழுத்துக்களுக்கு (பக) மாத்திரம் ஒரு பொருளுண்டு. மூன்றெழுத்துக்களுக்கு (பகவ)ம் ஒரு பொருளுண்டு. முழுச்சொல்லுக்கும் ஒரு பொருளுண்டு. இதெல்லாம் விஷ்ணு புராணத்தில் பரக்கப் பேசப்பட்டுள்ளது :—

i. 'ப' (भ) என்னும் எழுத்தின் பொருள் :—

"[1] संभर्तेति तथा भर्ता भकारार्थस्तथा मुने।"

(ஸம்பர்த்தேதி ததா பர்த்தா பகாரார்த்தஸ்ததா முநே!)

संभर्ता (ஸம்பர்த்தா) = மூலப்பிரகிருதியை ஸ்ருஷ்டிக்குத் தகுந்ததாகச் செய்பவன்.
भर्ता (பர்த்தா) = உடையவன், வளர்ப்பவன் – ஆதாரமாயிருப்பவன்.

ii. 'ग' (க) என்னும் எழுத்தின் பொருள் :—

[2] "नेता गमयिता स्रष्टा गकारार्थस्तथा मुने।"

(நேதா கமயிதா ஸ்ரஷ்டா ககாரார்த்தஸ்ததா முநே!)

नेता (நேதா) = காப்பவன், அவரவர்களைத் தத்தம் வினைப்பயனை அடையச் செய்பவன்; गमयिता (கமயிதா) = தன்னுள் இழுத்துக்கொள்பவன் (ஸம்ஹாரம் செய்பவன்); स्रष्टा (ஸ்ரஷ்டா) = படைப்பவன்.

iii. 'भग' (பக) என்னும் இரண்டெழுத்துக்கும் சேர்ந்து ஒரு பொருள் :—

[3] "ऐश्वर्यस्य समग्रस्य वीर्यस्य यशसश्श्रियः।
ज्ञानवैराग्ययोश्चैव षण्णां भग इतीरणा॥"

(ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸ: ச்ரிய:।
ஜ்ஞான வைராக்யயோச்சைவ ஷண்ணாம் பக இதீரணா॥)

இதன் கருத்து முன்னமே விளக்கப்பட்டுள்ளது.

இனி 'வ' என்னும் எழுத்தின் பொருள் ;—

[4] वसन्ति तत्र भूतानि भूतात्मन्यखिलात्मनि।
स च भूतेष्वशेषेषु वकारार्थस्ततोऽव्ययः॥

1. ஸ்ரீ விஷ்ணு புராணம் 6-5-73.
2. ,, ,,
3. ,, ,, 74.
4. ,, ,, 75.

(வஸந்தி தத்ர பூதாநி பூதாத்மந்யகிலாத்மநி ।
ஸ ச பூதேஷ்வசேஷேஷு வகாரார்த்தஸ்ததோऽவ்யய: ॥)

'பூதங்களைத் தன்னுடம்பாக உடையவனும், எல்லாவற்றையும் அடக்கியாள் பவனுமான இறைவன்மேல் எல்லாப் பொருள்களும் வஸிக்கின்றன. அவனும் எல்லாப் பொருள்களிலும் வஸிக்கிறான். ஆயினும் அவைகளில் காணப்படும் மாறுபாடுகள் இவனுக்கு இல்லை' என்பது.

ஈண்டு ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் பொருள் கூறுமிடத்து அவ்வவ் வெழுத்துக்களில் தொடங்கும் தாதுக்கள் (பகுதி) ஆதாரமாகக் கொள்ளப்பட் டுள்ளன. ஆதலின் இதை வெறும் கற்பனையாக நினைக்கக்கூடாது.

இனி 'भगवान्' (பகவான்) என்னும் சொல்லின் முழுப்பொருள் :—

[1] "एवमेष महान् शब्दो मैत्रेय! भगवानिति ।
परमब्रह्मभूतस्य वासुदेवस्य नान्यगः ॥"

(ஏவமேஷ மஹான் சப்தோ மைத்ரேய பகவானிதி ।
பரமப்ரம்மபூதஸ்ய வாஸுதேவஸ்ய நாந்யக: ॥)

'மைத்ரேய முனிவரே! இவ்வாறு 'பகவான்' என்னும் இப்பெரிய சொல் பரம் பொருளாகிய வாஸுதேவனுக்கே பொருந்தும். வேறு பொருளுக்கு அல்ல' என்று.

[2] तत्र पूज्यपदार्थोक्तिपरिभाषासमन्वितः ।
शब्दोऽयं नोपचारेण ह्यन्यत्र ह्युपचारतः ॥

(தத்ர பூஜ்யபதார்த்தோக்திபரிபாஷாஸமன்வித: ।
சப்தோயம் நோபசாரேண ஹ்யன்யத்ர ஹ்யுபசாரத: ॥)

'சிறந்த பொருளை யுணர்த்தும் சக்தியுள்ள இச்சொல்' அந்த பரப்ரும்மத்தில் இன்றியமையாதவாறு பொருந்தும். மற்றவிடத்திலோவெனில் [3]'கௌண' மாகக் கொள்ளப்படும்.

[4] उत्पत्तिं प्रलयञ्चैव भूतानामागतिं गतिम् ।
वेत्ति विद्यामविद्याञ्च स वाच्यो भगवानिति ॥

(உத்பத்திம் ப்ரலயஞ்சைவ பூதானுமாகதிம் கதிம் ।
வேத்தி வித்யா மவித்யாஞ்ச ஸ வாச்யோ பகவானிதி ॥)

---

1. ஸ்ரீ விஷ்ணு புராணம் 6-5-76.
2. ,, ,, 77.
3. ஒரு சொல், தன் பொருளை விட்டு மற்றொரு பொருளையுணர்த்துமாயின் அதை 'ஔபசாரிகம்' 'கௌணம்' என்பர். 'பகவான்' என்னும் சொல்லுக்கு முக்கியமான பொருள் இறைவன். அவனைத் தவிர்ந்த மற்ற பொருள்களில் அச்சொல் உபயோகிக்கப்படுவது 'கௌணம்'.
4. ஸ்ரீ விஷ்ணுபுராணம் 6-5-78.

'பொருள்களின் தோற்றம்–மறைவு (அழிதல்), வருதல்–போதல், வித்யை–அவித்யை, இவற்றை எவன் அறிவானோ அவன் 'பகவான்' எனப்படுவான்.

[1] ज्ञानशक्तिबलैश्वर्यवीर्यतेजांस्यशेषतः ।
भगवच्छब्दवाच्यानि विना हेयैर्गुणादिभिः ॥

(ஜ்ஞானசக்திபலைச்வர்யவீர்யதேஜாம்ஸ்யசேஷத: ।
பகவச்சப்தவாச்யாநி விநா ஹேயைர்குணாதிபி: ॥)

இதன் கருத்து முன்பே விளக்கப்பெற்றது.

பகவன் = சூரியன்

தமிழில் 'பகவன்' என்னும் சொல்லுக்குச் சூரியன் என்னும் பொருளுண்டு. 'பகலவன்' 'பகலோன்' 'பகல் செய்வான்' என்று [2] 'பகல்' என்னும் சொல்லின் மேல் வந்த பெயர்கள் பலவும் சூரியனுக்குள்ளன. 'தோன்றுதல்' என்னும் பொருளில் 'தோன்றல்' என்னும் சொல் போலப் 'பகுத்தல்' என்னும் பொருளில் [3] 'பகல்' என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது.[4] ஆதலின் 'பகு' என்னும் பகுதியினின்றும் தோன்றிய சொல்லே 'பகல்' என்பது. 'பிரிதல்' அல்லது 'பிரித்தல்' என்பது இச்சொல்லின் பொருள். 'பகவன்' என்பதற்கும் 'பிரிப்பவன்' என்றே பொருளானமையின் 'பகவன்' 'பகல்' என்னுமிச்சொற்களிரண்டும் சொல்லிலும் பொருளிலும் நெருங்கிய தொடர்புள்ளவை. 'பகல்' என்னும் சொல்லுக்குப் பொருள்கள் பலவுண்டு. அவ்வாறே 'பகவன்' என்னும் சொல்லுக்கும் பல பொருள்களுண்டு. இச்சொற்களிரண்டும் ஒரே பகுதியினின்றும் தோன்றினமையின், அவற்றின் பொருள்கள் பலவற்றிலும் ஒற்றுமை காணப்படுவது இயல்பேயாகும். 'பகவன்' என்பதற்குப் 'பரம்பொருளாகிய இறைவன்' என்று பொருள் கொள்ளுமிடத்து, பகுதிப்பொருளின் பொருத்தத்தைக் கீழே விளக்கினோம். அது போலவே 'சூரியன்' என்னும் பொருள் 'பகவன்' என்னும் சொல்லுக்கு ஏற்கப்படும்பொழுதும் பகுதிப் பொருளின் பொருத்தத்தை ஈண்டு எடுத்துரைப்போம்.

பகல் = ஊழிக்காலம். பகவன் = பிரிப்பவன். ஆதிகாலத்தில் நாம் வாழும் இப்பூமியும், இதைப்போன்ற செவ்வாய்–வியாழன்–முதலிய பல கிரகங்களும் இல்லாமலிருந்தன. சூரியன் ஒன்றே தனித்திருந்தது. அது மற்றொரு

1. ஸ்ரீ விஷ்ணுபுராணம் 6–5–79.
2. 'பாஅல் புளித்துப் பகலிருளினும்' பகல் = சூரியன். புறநானூறு 2ம் பாட்டு.
'பன்மலர்ப் பூம்பொழிற் பகன் முளைத்ததுபோல்' மணிமேகலை 4-92.
3. 'பகலிடங் கண்ணிப்பல சொடுங்கூடி' புறநானூறு–249.
4. 'பகுத்தலிற் பகலாயிற்று' சிலப்பதிகாரம் 4–81–அடியார்க்கு நல்லாருரை.

நட்சத்திரத்தின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டபொழுது அதனின்றும் ஒரு பகுதி தனிப்பட்டது. அது பலவாறுகச் சிதறியது. அவைகள் தான், இப்பொழுது–பூமி–அங்காரகன்–புதன்–வியாழன்–வெள்ளி–சனி–நெப்டியூன்–என்றெல்லாம் அழைக்கப்படும் கிரகங்கள். தன் வடிவத்தின் ஒரு பகுதியைப் பகுத்து ஊழிக்காலத்தில் இவ்வுலகையும் மற்ற உலகங்களையும் தோற்றுவித்தமையின் 'பகவன்' என்று சூரியனைக் கூறினர்.

பகல் = சூரியன் தெரியும் 30 நாழிகை கொண்ட அரை நாள். பகவன் = 60 நாழிகை (பூமியைப் பொறுத்த வரை)களை ஒரு நாளாகவும், அதில் பாதி இரவாகவும் மற்றொரு பாதி பகலாகவும் பிரித்தவன். இவ்வாறு செய்பவன் சூரியனேயல்லவா? கிருஷ்ண யஜுர்வேதம் தைத்திரீயஸம்ஹிதையில்–6வது காண்டத்தில் 4வது ப்ரச்னத்தில் 8வது அனுவாகத்தில் உள்ள ஒரு கதை ஈண்டு நோக்கற்பாலது:—'(முன்பு) இது (காலம்) இரவென்றும் பகலென்றும் பிரிக்கப்படாமல் இருந்தது. அந்தத் தேவர்கள் மித்திரன்–வருணன், இவ்விருவரையும் இதை (காலத்தை)ப் பிரித்து நிலைநிறுத்துமாறு வேண்டினர். அவ்விருவரும், ஸோமயாகத்தில் தங்களுக்கு முன்பாக ஒரே ஒரு [1]கிரகம்தான் கிரகிக்கப்படலா மென்று வரம் கேட்டனர். அவ்வாறே வரமருளப்பட்டது. அதனால் மைத்ராவருணக்ரகத்திற்கு முன் ஐந்திரவாயவக்ரகம் ஒன்றுதான் கிரகிக்கப்படுகிறது. [2]மித்திரன் பகலையும், [3]வருணன் இரவையும் உண்டுபண்ணினர். அதன் பிறகு தான் இது (காலம்) இருகூறுகப் பிரிந்தது. ஆதலின் மைத்ராவருணக்ரகத்தை அனுஷ்டிப்பது மேற்கூறிய பயனைத் தரும்' என்பது கதை. இதை விளக்கும் வேதவாக்கியங்கள்:—

"न वा इदन्दिवा न नक्तमासीदव्यावृत्तन्ते देवा मित्रावरुणावब्रुवन्निदन्नो विवासयतमिति तावब्रूतां वरं वृणावहा एक एवावत्पूर्वो ग्रहो गृह्याता इति तस्मादैन्द्रवायवः पूर्वो मैत्रावरुणाद्गृह्यते ... मित्रोऽहरजनयद्वरुणो रात्रिन्ततो वा इदं व्यौच्छद्यन्मैत्रावरुणो गृह्यते व्युष्ट्यै" (தைத்திரீய ஸம்ஹிதை–6வது காண்டம்–4வது ப்ரச்னம், அனு. 8) என்பன.

அகண்டமான காலத்தைப் பகல்-இரவு-என இருகூறுகப் பகுத்தமையின் "பகவன்" என்று சூரியனைக் கூறினர். இதனின்றும் ஒரு உண்மை வெளிவருகின்றது. இந்தப் பூமி தோன்றியதும் சுழற்சியின்றி வெகுகாலம் இருந்திருக்க வேண்டும். அக்காலத்தையே மேற்கூறிய வேதவாக்கியம் குறிப்பிடுகின்றது. பிறகு சுழலவாரம்பித்திருத்தல் வேண்டும். அதுமுதலாக, சூரியன் தெரியும் காலம் மத்தியானம் எனவும், அவன் தெரியாத காலம் இரவு எனவும் பகுக்கப்

1. கிரகம் = ஸோமமெனப்படும் ஒருவகைக் கொடியைப் பிழிந்து அதனின்றும் கிரகிக்கப்படும் சாறு வைப்பதற்கான சிறு பாத்திரம்.

2–3. பன்னிரண்டு வடிவமான (12 மாதங்களில்) சூரியன்களுள் இருவரின் பெயர்கள் இவை.

பட்டது. அவ்விதமான பாகுபாட்டிற்கு முக்கிய காரணமாயிருந்தமையின் "பகவன்" என்று சூரியன் வழங்கப்பட்டான், என்று.

[1] பகல்=அரை யாமம். 30 நாழிகை கொண்ட இரவு, 4 யாமங்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒரு யாமம் என்பது 7½ நாழிகை. அதில் கடைசி யாமத்தின் பின்பாதி (3¾ நாழிகை) 'பகல்' எனப்படும், 'பின் மாலை' எனவும் வழங்கப் படும். சூரியன் உதயமாவதற்கு முன்புள்ள அரையாமம் 'பகல்' என்பது. தினந் தோறும் அதை முன்னிட்டுக்கொண்டே சூரியன் தோன்றுவதனால், அவனைப் 'பகல்' என்றும், 'பகவன்' என்றும் வழங்கினர். இந்த அரை யாமத்துக்கு ஸம்ஸ்க்ருதத்தில் 'உஷஸ்' (उषस्) என்று பெயர். சூரியனுக்கு 'பகன்' (भग:) என்று பெயர். உஷஸ் (பின்மாலை) பகனை (சூரியனை) அழைத்து வருகிறதாக ருக்வேதத்தில் கூறப்பட்டுள்ளது:—

[2] समध्वरायोषसो नमन्त दधिक्रावेव शुचये पदाय ।
अर्वाचीनं वसुविदं भगन्नो रथमिवाश्वा वाजिन आवहन्तु ॥

(ஸமத்வராயோஷஸோ நமந்த ததிக்ராவேவ சுசயே பதாய ।
அர்வாசீனம் வஸுவிதம் பகம்நோ ரதமிவாச்வா வாஜிந ஆவஹந்து ॥)

'உஷஸ்' எனப்படும் தேவதைகள், (இவர்கள் – 30 – சகோதரிகள். பூமியின் பல பகுதிகளில் வரிசையாக, சூரியோதய காலம் மாறிக்கொண்டே செல்கையில், அதற்கேற்ப உஷஸ்ஸும் (பின் மாலையும்) மாறுபடுமல்லவா? அவற்றை 30 எனக் கணக்கிட்டுள்ளனர்). யாகத்துக்காக, குதிரைகள் தேரை இழுத்துவருவது போல, சூரியனைக் கொண்டுவரட்டும் என்று கருத்து. குதிரைகள் தேரை இழுத்து வருகிற மாதிரி உஷஸ் சூரியனை அழைத்து வருகின்றமையைப் பேசியபடி. மற்றொரு வாக்கியம் 'பகன்' (भग:) என்னும் தேவனுக்கு உஷஸ் (பின்மாலை) சகோதரியென்றும், வருணனுக்குத் தங்கையென்றும் கூறுகின்றது.

'भगस्य स्वसा वरुणस्य जामिः' (ऋग्वेदे- 1-123-5)
(பகஸ்ய ஸ்வஸா வருணஸ்ய ஜாமி:) (ருக்வே. 1–123–5)

'உஷஸ் தேவதையே! நீ பகனுக்கு ஸகோதரி, வருணனுக்குத் தங்கை' என்பது இதன் பொருள். 'பகன்' 'வருணன்' இவ்விரண்டும் சூரியனுடைய பெயர்கள். அவனுக்கு உடன்பிறந்தவளாக உஷஸ் தேவதை (பின்மாலை)யை இவ்வாக்கியம் வருணிக்கின்றது. அவனுடன் கூடவே முன்னும் பின்னுமாகத் தோன்றுகிரு

1. 'அரையிருள் யாமத்தும் பகனுந்துஞ்சார்' சிலப்பதிகாரம்—4. 81.
'நடுநாள் யாமத்தும் பகனுந்துஞ்சான்' புறநானூறு—189.
'பகலே நான் ஒரு முகூர்த்தம்' சூடாமணி நிகண்டு.
2. ருக்வேதம் 7–41–5. (பகஸூக்தம்)

ளல்லவா இவளும். அதனால், அவனும் அவளும் சகோதர சகோதரிகளாகக் கற்பனை செய்யப்படுகின்றது.

[1] பகல் = இளவெயில். காலைவேளையிலுள்ள சூரியனைப் 'பகல்' என்று வழங்குகின்றனர். 'பகவன்' என்றும் அவனைக் கூறுவது பொருத்தமுடைத்து. இதே கருத்தில் ருக்வேத வாக்கியத்தைக் காண்மின்!

[2] "प्रातर्जितं भगमुग्रं हुवेम वयं पुत्रमदितेर्यो विधर्ता ।
(ப்ராதர்ஜிதம் பகமுக்ரம் ஹுவேம வயம் புத்ரமதிதேர்யோ விதர்த்தா)

'உலகத்தையெல்லாம் தரித்துக்கொண்டிருப்பவனும், வெற்றிவீரனும், அதிதியின் புத்திரனுமாகிய 'பகன்' என்னும் தேவனை (பகவனை)க் காலையிலேயே நாம் அழைப்போம்' என்பது இதன் கருத்து.

[3] பகல் = சூரியன். பொதுவாகச் சூரியனைப் 'பகல்' என்று வழங்குகின்றனர். 'பகவன்' என்னும் சொல்லும் அவ்வாறேயாகும். வேதங்களிலும் அப்படியே.

"भगो अर्यमा सविता पुरंधिः"
(பகோ அர்யமா ஸவிதா புரந்தி:)

இவ்வாக்கியம், ருக்வேதம் *10–85–36.* யஜுர்வேதம் மந்த்ரப்ரச்னம் *1–3–3.* அதர்வண வேதம் *14–1–50.* ஸாமவேதம் மந்த்ரப்ராம்மணம் *1–2–16.* இவ்விடங்களில் உள்ளது. இதில் 4 சொற்கள் உள்ளன. நான்கும் சூரியனுடைய பெயர்கள். இக்கட்டுரையின் தொடக்கத்தில் சூரியனை பக:–பகவ:–பகவான்—என்று குறிப்பிடும் யஜுர்வேதவாக்கியம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஆதலின் 'பகவன்' என்றும், 'பகல்' என்றும் தமிழில் சூரியன் வழங்கப்படுவதுபோல் ஸம்ஸ்க்ருதத்திலும் நான்கு வேதங்களின் மேற்கோள் காட்டப்பட்டன. திருக்கோவையாரில்,

'பகன்றாமரைக்கண் கெட............*(184)*
'பகலோன் கரந்தனன்..............*(188)*

பகன்–பகலோன்–என்று சூரியனைக் குறிக்கிறார். ஒரு ஆண்டில் முறையே வரும் பன்னிரண்டு மாதங்களுக்கும் அபிமானியாகிய சூரியனைப் [4]பன்னிரண்டு பெயர்க

---

1. 'பாய்நறைநீலம் பகலாகத்தையினுள்' பரிபாடல் 11-96.
2. ருக்வேதம் 7-42-2
3. 'பன்மலர்ப்பூம்பொழிற்பகல் முளைத்தது போல்' மணிமேகலை—4-92
4. धाता मित्रोऽर्यमा शक्रो वरुण स्त्वंश एव च । भगो विवस्वान् पूषा च सविता दशमस्तथा ॥ एकादशस्तथा त्वष्टा द्वादशो विष्णुरुच्यते । जघन्यजस्तु सर्वेषामादित्यानां गुणाधिकः ॥

ளிட்டு வழங்குகின்றனர். இவர்களுள் 'பகன்' என்பவரும் ஒருவர். [1] இவர் 7-வது (ஐப்பசி மாதத்தின்) தேவதை. இவர்களுள் 'பகன்' (भग:) என்னும் ஆதித்தனையே 'பகவன்' 'பகவான்' என்று மற்ற இரண்டு சொற்களாலும் வேதம் வழங்குகின்றது. அது:—

[2] "श्रेष्ठो देवानां भगवो भगासि"

[3] "भग एव भगवाँ अस्तु देवाः"

(ச்ரேஷ்டோ தேவானும் **பகவோ பகாஸி**)

(**பக** ஏவ **பகவான்** அஸ்து தேவா:)

என்னும் வேத வாக்கியங்களால் முன்பே எடுத்துக்காட்டப்பட்டது. மேற் சொன்ன வாக்கியங்களின் கருத்து:—

'**பகவன் – பகன்** – எனப்படும் தேவனே! நீ தேவர்களுக்குள் உயர்ந்த வனுக இருக்கிருய்'

'தேவர்களே! **பகன்** எனப்படும் தேவனே **பகவானுக**விருக்கட்டும்' என்பது. இவ்வாறு சூரியனைத் தேவர்களுள் சிறந்தவனுகக் கூறுவதற்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் ஒன்றை ஈண்டு விளக்குவோம்:—

உயிர் வகைகள் யாவும் ஆரோக்கியத்தையும் நல்ல அறிவையும் சூரியனிட மிருந்தே பெறுகின்றன. 'आरोग्यं भास्करादिच्छेत्' (ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத்) என்பது முதுமொழி. 'ஆதித்தனிடமிருந்து ஆரோக்யத்தைப் பெறவேண்டும்' என்பது இதன் கருத்து. '[4]भगेमां धियमुदवाददन्न:' (பகேமாம் தியமுதவாததந்ந:) என்பது ருக்வேதம்–அதர்வணவேதம்–யஜுர்வேதம் ஆகிய மூன்று வேதங்களி

(தாதா[1] மித்ரோ[2]ऽர்யமா[3] சக்ரோ[4] வருண[5] ஸ்த்வம்ச[6] ஏவ ச ।
பகோ[7] விவஸ்வான்[8] பூஷா[9] ச ஸவிதா[10] தசமஸ்ததா ॥
ஏகாதசஸ்ததா த்வஷ்டா[11] த்வாதசோ விஷ்ணு[12] ருச்யதே ।
ஜகன்யஜஸ்து ஸர்வேஷாமாதித்யாநாம் குணுதிக: ॥ மகாபாரதம் 1-65.

இதன் கருத்து:— 'தாதா – மித்திரன் – அர்யமா – சக்ரன் – வருணன் – அம்சன் – பகன் – விவஸ்வான் – பூஷா – ஸவிதா – த்வஷ்டா – விஷ்ணு என ஆதித்தன் பன்னிரண்டு வகை. இவர்களுள் முடிவில் கூறப்பட்ட வன் எல்லோரினும் குணங்கள் மிக்கவன்'

1. இது மகாபாரதத்தில் சொல்லியபடி. ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டபடி 'பகன்' 10வது (தை மாதத்தின்) தேவதை (ஸ்ரீ விஷ்ணுபுராணம் 1-10).
2. கிருஷ்ண யஜுர்வேதம் – ப்ராம்மணம் 3-1-8.
3. ,, ,, 2-5-5-1. ருக்வேதம் 7-41-5.
4. ருக்வேதம் 7-41-3. அதர்வணவேதம் 3-16-3. சுக்லயஜுர்வேதம் 34-36. கிருஷ்ணயஜுர்வேதம் தைத்திரீய ப்ராம்மணம் 2-5-5-2.

லும் காணப்படுகின்றது. 'பகன் எனப்படும் தேவனே! எங்களுக்கு இவ் வறிவைக் கொடுத்து, காப்பாற்றவேண்டும்' என்பது இதன் கருத்து. ஆதித் தனுக்கு 'ஸவிதா' என்ருெரு பெயருண்டு. 'காயத்ரீ' என்று பிரசித்திபெற்ற மந்திரத்துக்கு அந்த 'ஸவிதா' தான் தேவதை. 'ஸவிதா' என்ருல் 'தூண்டுதல் செய்பவன்' என்று பொருள். வேதத்தில் பலவிடங்களிலும் 'தேவனுகிய ஸவிதாவினுடைய தூண்டுதலினுல் (இக்காரியத்தைச் செய்கிறேன்), என்று கருத்துள்ள சொற்ருெடர் காணப்படுகின்றது. 'நமது அறிவு கிளர்ந்தெழுமாறு செய்கிற அந்த ஸவிதாவினுடைய ஒளியை வணங்குகின்ரோம்' என்பதே காயத்ரீ மந்திரத்தின் பொருள். இரவு முழுவதும் செயலற்று அசேதனம்போல் உறங்கி விழுந்துக்கிடக்கும் உயிர் வகைகள், சூரியனைக் கண்டவுடன் தாமரைபோல் அறிவு மலரப்பெற்று, புறவிருள் அகவிருள் இரண்டும் நீங்கப்பெற்றுத் தத்தம் கடமைகளில் ஈடுபட்டு உய்வதற்கு இன்றியமையாத வழிகாட்டி ஆதித்தனே யல்லவா? அவனைத் தேவர்களுள் உயர்ந்தவனென்னுமல் வேறு யாரைச் சொல்வது? 'பகவன் முதற்றே யுலகு' என்று, 'உலகு, 'பகவன்' எனப்படும் சூரியனையே முதலாகவுடையது' என்னும் கருத்தில் இக்குறள் தோன்றிற்று.

பகவன் = சிறந்தவன்.

[1] 'சிறப்புடைய பொருள்கள் யாவற்றையும் 'பகவத்' சப்தத்தினுல் வழங்குவர். ஆயினும் அது முக்கியமன்று. இச்சொல் பரம்பொருளையே முக்கிய மாகக் குறிக்கும்' என்னும் கருத்துள்ள ஸ்ரீவிஷ்ணுபுராண ச்லோகம் முன்பு விளக்கப்பட்டுள்ளது. பகவத் கீதையிலும்:—

[2] "यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा ।
तत्तदेवावगच्छ त्वं मम तेजोंशसंभवम् ॥"

(யத்யத் விபூதிமத் ஸத்த்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா ।
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ச ஸம்பவம் ॥)

என்னும் சுலோகத்தில் 'சிறந்த பொருள்கள் யாவும் என் அம்சத்தினின்றும் தோன்றியவை' என்று கிருஷ்ண பரமாத்மா பறைசாற்றுகிருர். ஆதலின் உலகிற்சிறந்த பலவற்றையும் 'பகவன்' என்னும் சொல்லால், பல்வேறு மதத் தினரும் நிகண்டுக்காரர்களும் வழங்குகின்றனர். ஜைன மதத்தினர் 'அருகன்' என்பர். புத்த மதத்தினர் 'புத்தன்' என்பர். பிரமன் – சிவன் – விஷ்ணு (திருமால்) ஆகிய மூவருக்கும் பெயரென்பர். சூரியனுக்குப் பெயரென்பர்.

1. तत्र पूज्यपदार्थोक्तिपरिभाषासमन्वितः ।
शब्दोऽयं नोपचारेण ह्यन्यत्र ह्युपचारतः ॥ *ஸ்ரீ விஷ்ணுபுராணம் 6-5-77.*

2. *பகவத்கீதை 10-41.*

இதெல்லாம் உலகின் பல்வேறு பகுதிகளில் வழங்கப்பட்டு வந்திருத்தலின் [1] நிகண்டுக்காரர்கள் அவையெல்லாவற்றையும் தத்தம் நிகண்டுக்களில் சேர்த்துள்ளனர். [2] 'திருமாலடியார்கள்'– என்று ஆழ்வார்கள் வழங்குகின்றனர். [3] 'தமிழ்வேதமறிந்த **பகவர்களே**' என்பது வேதாந்ததேசிகருடைய இனிய குரல். உலக வழக்கையொட்டி நிகண்டுக்காரர்களால் தொகுக்கப்பட்டு, ஏனைய நூலாசிரியர்களாலும் உபயோகிக்கப்பட்ட இப்பொருள்கள் யாவும் 'பகவன்' என்னும் சொல்லுக்கு ஏற்றவையே. அதில் யாரும் ஆட்சேபணை செய்ய இயலாது. அவசியமுமில்லை. விஷ்ணு புராணம் – பகவத்கீதை – இவற்றில் கூறப்பட்டபடி, பரம்பொருளான இறைவனொருவனே இச்சொல்லின் முக்கியமான பொருள். மற்றையாவும், அவனது அம்சத்தினின்றும் தோன்றினமையின் அவனைக் குறிக்கும் சொல்லால் (பகவன் – என்னும் சொல்லால்) வழங்கப்பெற்றன–என்பதுமட்டும் மறுக்க முடியாத உண்மை.

இவ்விடத்தில் அடிப்படையான உண்மையொன்று நம் நினைவிலிருக்க வேண்டும். சொற்களை நிகண்டுக்காரர்கள் தொகுக்கும்போது, 'வழக்கிலுள்ளவை' என்னும் ஒரே காரணத்தைத்தான் ஆதாரமாகக் கொள்கின்றனர். ஸம்ஸ்க்ருதபதம் – தமிழ்ச்சொல் – என்றிப்படியெல்லாம் பிரித்து ஒன்றையேற்று மற்றொன்றைக் கைவிடுவதில்லை–அவ்வாறு செய்வது அவசியமில்லாதது மட்டுமல்ல, சாத்திய மில்லாததுங்கூட. இக்கருத்தைப் பிங்கல முனிவர் **தமது** நிகண்டு நூலின் சிறப்புப்பாயிரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார் :—

"இயற்சொற்றிரி சொற்றிசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுட்கணிகலனுதலின்"
... ...
"வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொற்றாகுஞ்
சிதைந்தன வரினு மியைந்தனவரையார்"

என்னும் மூலத்தையும் ;

'வடசொல்லுக்கேயுரிய வெனப்படுஞ்சிறப் பெழுத்தினீங்கி யிருவகைப்படு மொழிகளுக்கும் பொதுவாகிய எழுத்தாலியன்ற சொல்லும், வடவெழுத்தாலியன்ற வடசொல் சிதைந்து வந்தாலும் செய்யுளிடத்துப் பொருத்தமுடையன வென்று களையர்து புலவர் கொள்ளுஞ் சொல்லுமாகிய வடசொல்லுமென்ற' என்னும் உரைப்பகுதியையும் காண்மின்! ஒப்புயர்வற்ற இக்கருத்தை அடி

1. சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு.
2. பெரியாழ்வார் திருமொழி 4–9–6.
3. தேசிகப்ரபந்தம்.

THE 'BĒḌI ĀNJANĒYA' AT TIRUMALAI.

(*Sri A. Balasubrahmanyan, Tiruppati*)

The temple of 'Bēḍi Āñjanēya' is situated opposite to the Shrine of Sri Veṅkatēśwara just at the corner of the entrance to the Sannidhi Sreet of the main temple. The special feature about this Āñjanēya is that He is fettered hand and foot – a pose well-fitted and adapted to represent the attitude of a bond soul to the Lord opposite, who has his abhaya or fear-removing or saving hasta turned towards His feet. The picture reproduced here has been taken in the above Shrine.

The downward turned Abhaya-hasta of the Lord is said to mean 'Surrender to me and I shall save you', even as He has stated in the Bhagavad Gita. As original as the assurance is the pose of the Bhakta Āñjanēya representing the soul's monkey-like mind being bound by the Grace of the Lord. On perceiving the Divine Lord, the activities of the mind and the other organs of sense and action, get bound and the Soul released from its bondage to them.

But in this connection there is the local version of a puranic story woven

round this Ānjanēya. It says that the Lord desired to bind Ānjanēya (monkey) hand and foot so as to put a stop to his antics when he was on his way to fetch 'Sanjeevi' to bring to life the lives of the dead warriors in the Rāma-Rāvana War. But Ānjanēya agreed to be bound after Sri Rāmachandra's work was finished. True to his promise he returned to the Lord Sri Vēnkatēśwara and submitted himself to be fettered body and mind.

A probe into Kamba Rāmāyana is interesting :- Sugrīva mentions about Tiruvēngaḍam to Hanumān who was deputed to the South in search of Sīta in stanzas 26 to 29 of the 'chapter for search' (நாடவிட்டபடலம்). In stanza 26 he describes Vēngaḍam as the border for the northern and southern languages: stanza 27 is very significant in describing the special features of the place; 'where Sages who are enemies of the two-fold causes of rebirths were residing'. The stanza runs as follows :-

இருவினையு மிடைவிடா வெல்வினையு மியற்றுதே யிமையோ ரேந்தும்,
... ...
... ... கடையின் ஞானத்,
தரு வினையின் பெருப்பகை ஓராண்டுள ரீண்டிருந்து மடிவணங்கற்பாலர்.

'The Sages you may worship, from the very place where (Sugrīva and Hanuman) we are standing'. The motive for saying so is brought out in stanza 29 where he says that if he visited the place he would straightaway to go to Mōksha (vīḍu), divested of the effects of good and evil deeds and thereby Rāmakārya would suffer. In such a place Rāvana would not have dared to keep Sīta in captivity and therefore the search of that area was needless. The stanza reads thus :-

கோடுறு மால்வரைய தனைக்குறுகுதிரே லுந் நெடிய கொடுமை நீங்கி,
வீடுறுதி ராதலின் விலங்குதிர் ... ...

Stanza 28 gives a detailed description of the wonderful Hills of the Sages where elephant calves and tiger cubs sleep together.

The instructions of Sugrīva seem to have worked deep into the heart of Śri Ānjanēya and he only waited for the time to come for him to see the place for himself. He stands alone at the end of Rāmāyana when Srī Rāma went to Vaikunṭha taking Sugrīva with him. This incident is described in stanza 143 Uttara kandam 'Chandraketu Nagar padalam' :-

மருத்துவின் மைந்தனை மகிழ்ந்து நோக்கி முன்
புரைத்தது முணர்த்தியால் உலகில் வாழ்வதுன்
கருத்து முண்டாதலாற் கனகத் தோளினா
யிருத்தி நம்மாணை யென்றி ராமன் போயினான்.

Then left to himself Ānjanēya remembered the words of Sugrīva about Thiruvēngaḍam and determined that to be his future abode in this world. On

arrival in all humility of a Bhaktha he hàd the Grace of the Lord who fettered the two causes for re-birth depicted appropriately by the chains for the hands and feet.

A recognition of the fact of Āñjanēya having taken abode on the Hills by one of the Ālwārs would add to the evidence in this matter. Sri Tiruppān Ālwar in his Amalanādipirān third verse begins to describe the place of Vēngaḍam where the Lord meets the gods as 'Mandhi Pāay Vaḍavēngadamāmalai' (மந்திபாய் வடவேங்கடமாமலை) meaning in the ordinary sense the great Hill where the monkeys jump. The word 'jump' cannot fully convey the meaning intended by 'Pāay' which means 'to jump at a target'. It is quite appropriate to cite here stanza 125 of the Chandraketu Nagar padalam in the Uttara kanda of Sri Kambarāmāyana 'கருத்தி வந்தெழுந்திர் கடவுடன்னையோர், பருத்த செங்கனி யெனப் பாய்ந்த பான்மையர்'. Indeed none else than Āñjanēya did the feats of jumping (பாய்வது) in such outstanding ways as jumping to catch the Sun, jumping across to Lanka, and jumping to Himalayas to bring Sanjeevi. Sri Tiruppān Ālwār referring to 'Mandipāay Vaḍa Vēngaḍamāmalai' should have had in his vision the Āñjanēya who jumped to the Hill for his final stay and that seems to be the proper interpretation for the noble depiction on the Hills.

Thus Bēḍi Āñjanēya on the Hills becomes a most significant Shrine on the Hills so well-known as the apara Vaikuṇṭha, the Vaikuṇṭha on the earth.

Would it be too much to hope that the Dēvasthānam authorities would take more interest in bringing the attention of the pilgrims to this significant and unique Shrine in the near future?

TEXT

(c) अथ नीराजितपद्यं यथा —

विघ्नेशं शारदांबां कमलभवहरीशानदेवेशदेवान्
भानुं भानोस्तनूजं ग्रहगणमखिलं तारकाचक्रवालम् ।
तन्नाथं शीतभानुं तदनु गुरुगणं भूपतिं मन्त्रिमुख्यान्
सभ्यान् कल्याणसिद्ध्यै विरचयति नटश्चारुनीराजनीयम् ॥

(d) अस्याभिनयः —

1. विघ्नेशं — 'बहिः क्षिप्तांगुलिद्वंद्वोऽधस्तलोऽनादरोज्झिते '[1] इति, त्रिपताकाद्विघ्नदर्शनं; पुरःस्थितमुष्टिनेशदर्शनम् ।

2. शारदांबां — मुखगतहंसास्येन हंसदर्शनं; मृगशीर्षाभ्यां वीणादर्शनं; हृदि स्थापित-पताकेनांबादर्शनम् ।

3. कमलभवं — [2] कमलवर्तनया पुरतः सव्यविकासितमुकुलेन

4. हरीशानदेवेशदेवान्,

हरि — सुदर्शनदर्शितसूचीमुखेन

ईशान — अरालाभ्यां जटादर्शनेन

देवेश — ऊर्ध्वगतोत्तानोर्ध्वांगुलिपताकाभ्यां हृदि मुष्टिदर्शनेन

देवान् — ऊर्ध्वगतोत्तानोर्ध्वांगुलिपताकाभ्यां

5. भानुं — सूचीमुखेन मण्डलदर्शनं

---

1. सङ्गीतरत्नाकरसप्तमाध्याये ११० तमश्लोकस्योत्तरार्धोऽयम् ।

2. (a) वर्तना — बाहूनां करणेनाथ समस्तव्यस्तयोजनात् ।
क्रमादुद्रुतादिवैचित्र्याज्जायन्तेऽत्र सहस्रशः ॥
वर्तनाश्चतुरैरूह्यास्ताः शोभाभरसंभृताः ।
(सं० र० अध्याय ७ श्लोक ३९)

(b) कमलवर्तना– स्वस्तिकांकुंचितौ हस्तौ व्यावृत्तपरिवर्तितौ ।
मिथः पराङ्मुखौ सन्तौ सैषा कमलवर्तना ॥

— कल्लिनाथकृतसंगीतरत्नाकरव्याख्याने नृत्याध्याये ३४८ तमश्लोकविवरणे कोहलीयोद्धृतवर्तनालक्षणे षोडशी वर्तना ॥

6. **भानोः** — पार्श्वे मण्डलाकारदक्षिणसूच्या

7. **तनूजं** — हृदि परिवर्तित पुरऊर्ध्वाधःस्थापितपताकाभ्यां बालदर्शनं

8. **ग्रहगणं** — वामपताकोपरि मण्डलाकारदोलितसंदंशात् । हृदिस्थितवाममुष्टिना ।

9. **अखिलं** — पुरोविस्तृतस्वस्तिकेन ।

10. **तारकाचक्रवाळं,**

तारका — ऊर्ध्वमुखदक्षिणसंदंशद्रुतदोलनेन

चक्रवाळं — पुरोमण्डलाकारसूच्या

11. **तन्नाथं** — पूर्णचन्द्रदर्शनेन पताकेन

12. **शीतभानुं,**

शीत — पुरोल्लासिताधोमुखमुकुलाभ्यां

भानुं — ऊर्ध्वाधस्तिर्यग्दक्षिणपार्श्वगतद्रुतत्रिपताकेन

13. **तदनु** — पुरः किंचिदूर्ध्वगतविलंबितदक्षपताकेन

14. **गुरुगणं,**

गुरु — मुखगतांजलिना,

गणं — पुरो मुष्टिद्वयसंयोगात्

15. **भूपतिं** — पताकाभ्यां भूमिदर्शनात् हृदि स्थापितस्वस्तिकपताकाभ्यां

16. **मन्त्रिमुख्यान्** — हृदि परिवर्तितचतुरान्मुष्टिदर्शनेन

17. **सभ्यान्** — पुरोविस्तृतपताकस्वस्तिकाभ्यां

18. **कल्याणसिद्ध्यै** — पुरोर्ध्वगताद्दुद्वृत्तान्मुष्टिद्वयसंयोगेन

19. **विरचयति** — अधोमुखाभ्यां पुरो हंसमुखाभ्यां

20. **नटः** — पुरोर्ध्वमुखदक्षिणकंपितालपद्मेन

21. **चारु** — पार्श्वदोलितसंदंशेन

22. **नीराजनीयं** — पुरोर्ध्वमुखाकिंचिद्विस्तृतपताकाभ्यां नीराजनं दर्शनीयम् । तन्नीराजनं किंचिदधोगतपताकेन ॥

इति नीराजनपद्यश्लोकाभिनयः ॥

TRANSLATION

Rule 18. After thus taking these eleven steps, following the traditional practice, the two 'cālakas' or graceful wavings of hand called 'Laharīchakram' and 'Nīrājanam' are to be performed, starting from the standing pose of 'maṇḍala'.[1]

They are described hereunder :—

(a) LAHARĪCAKRACĀLANAM :—

One of the hands is moved in a wallowing manner, and the other with the back presented forward is swung to and fro. The latter is then taken towards the left shoulder and extended outward. It is then pulled in, raised and moved this way and that with a rotatory motion like that of a mixing ladle and then moved at the sides slowly and with grace. The movements are accompanied by dance, the hands holding Hamsāsya[2] mudra. This is called 'Laharīcakra'.

(b) NĪRĀJANA CĀLANAM

The two hands are joined together so as to be about to cross each other. They are then extended in the same position and moved round in the horizontal plane, and then raised up to the head, and then moved round again. This is called 'Nīrājanā'.

(c) The stanza for Nīrājanā (waving of lighted camphor) is as follows :—

I, the actor perform, in the prescribed manner, the act of waving lighted camphor before Vighneśwara, the Lord of obstacles, Dēvi Saraswati, Lord Brahma Sri Mahāviṣṇu, Lord Śiva, Indra and other celestials, Sūrya, Yama, the planetary Deities, the Deities presiding over the stars, and Chandra; and then before the Āchāryas, the king, the principal ministers and the members of the audience.

---

1. '*Mandala Sthanaka*'. The standing pose of Mandala is described as follows :—

ऐन्द्रे तु मण्डले पादौ चतुस्तालान्तरास्थितौ ।
त्र्यश्रौ पक्षास्थितौ चैव कटिजानुसमस्थितौ ॥

In Mandala pose, the feet are placed 4 spans apart turned in a slightly oblique direction each leg having a triangular formation. The hip and the knees are in the same plane.

— Natya Sastra (Baroda Edition) Chap. 10, vv. 65 and 66.

2. 'Hamsasya' is shown by holding the thumb, the 1st finger and 2nd finger together, while the other fingers are apart.

(c. f.) तर्जनीमध्यमाङ्गुष्ठास्त्रेताग्निस्था निरंतरा ।
भवेयुर्हंसवक्त्रस्य शेषे द्वे संप्रसारिते ॥

(नाट्यशास्त्रं अ. ९ श्लोक. १०४)

(d) The abhinaya of this verse is as follows :—

(1) VIGHNĒŚAM (The Lord of obstacles)

'Vighna' or obstacle is shown by throwing out two fingers of 'Tripatāka' held with the palm facing downward; for it has been said, 'when two of the fingers are thrown out with the palm facing downward, it denotes rejection with disregard.

(2) ŚĀRADĀMBĀM (Saraswati)

The Hamsa vāhana is first shown by the Hamsāsya mudra in front of the face, and then is shown the Vīna by means of Mṛgaśirṣa in both hands, imitating the playing on Vīna. 'Amba' or mother is showing by holding Patāka mudra at the heart.

(3) KAMALA BHAVAM (Lotus-born i. e., Brahma) is indicated by 'Kamala vartanā'[1] in front and 'Mukula hasta'[2] opening out at the left side.

(4) HARI, ĪŚĀNA, DĒVĒŚA, DĒVĀN (Mahāviṣṇu, Paramaśiva, Indra and other celestials).

Hari – by tracing the cakra by means of the Sūcī mukha (pointed finger).

Īśāna – by showing the matted locks by the hand holding 'Arāla' mudra (the fingers stretched out as in 'Patāka' except the first finger which is slightly bent.

Dēvēsa – 'Dēva' is shown by patāka mudra aloft, the palm facing upward and the fingers bent upward; and Īśa is shown by holding the Muṣṭi mudra at the level of the heart to indicate lordship or authority.

Dēvān (the celestials) – by holding patāka mudra aloft, the palm facing upward and the fingers bent upward.

(5) BHĀNUM (the sun) by describing a circle with Sūcīmukha mudra.

(6) BHĀNŌH (of the sun) – by describing a circle with Sūcī mudra of the right hand.

---

1. 'Kamalavartana' is a combination of inward and outward winding movements of the hands starting from bent and Swastika position, that is, crossing each other or about to cross each other. (Vide item 16 of the Vartanas of Kohala extracted in the commentary of Kallinatha on Sl. 348 of Nrityadhyaya of Sangita Ratnakara).

2. Mukula hasta is formed by joining all the fingers and keeping their ends together, all facing upward.

समागताग्राः सहिता यस्यांगुल्यो भवन्ति हि ।
ऊर्ध्वा हंसमुखस्यैव स भवेन्मुकुलः करः ॥

(नाट्यशास्त्रं अ. ९ श्लो ११७)

श्रीभगवानुवाच ॥ ५ ॥

पाहा पार्था माझीं रूपें ॥ शतशोथ सहस्रें अमूपें ॥
नानाविधें दिव्यें निःपापें ॥ देखतां पापें पळोनि जाती ॥ १० ॥

नानाप्रकारिचे ज्यांचे वर्ण ॥ नाना आकृती थोर लहान ॥
येकाहुनि येक विलक्षण ॥ देवगणादि जन ज्यांत आटले ॥ ११ ॥ ६ ॥

पाहें आदित्य वसू रुद्र बहुत ॥ अश्विनीदेव तथा मरुत ॥
उदंड देखिलिं नाहित तें येथ ॥ रूपें विस्मित लक्षीं भारता ॥ १२ ॥ ७ ॥

येकत्र माझिया शरीरिं ॥ जग चराचर भरोवरि ॥
पाहें अद्य गुडाकेशा अंतरीं ॥ अन्य परि इछिसि तेहि ॥ १३ ॥ ८ ॥

याच दृष्टीनें माझें विलोकन ॥ करावया शक्य नव्हेसि आपण ॥
म्हणोनि देतसें दिव्य लोचन ॥ पाहें न्याहाळुन ममैश्वर्य योग ॥ १४ ॥

संजय उवाच ॥ ९ ॥

येरीकडे हस्तनापटणिं ॥ संजय रायातें विलोकुनि ॥
म्हणे येणेंरीती नृपा बोलोनि ॥ ईश्वर जनिं योगियांचा जो ॥ १५ ॥

तो श्रीहरी तया पार्थासी ॥ परम रूप ऐश्वर्यासी ॥
दाविता जाहाला तें केवी म्हणसी ॥ तरि तुजपासिं निरोपितों ॥ १६ ॥ १० ॥

अनेक वदनें नयन ॥ अनेकाद्भुत दर्शन ॥
अनेक दिव्याभरणें जाण ॥ वळिलिं दारुण दिव्यायुधें नाना ॥ १७ ॥ ११ ॥

दिव्यमाला दिव्य अंबर ॥ दिव्यगंधानुलेपन सार ॥
सर्वाश्चर्यकर देव दुर्धर ॥ अनंत अपार विश्वतोमुख ॥ १८ ॥ १२ ॥

सहस्र सूर्यांचें तेज गगनिं ॥ प्रगटे अकस्मात मिळोनि ॥
तरिहि या महात्म्याच्या तेजासी तुळणि ॥ नयें जनिं कदापिहिं ॥ १९ ॥ १३ ॥

येकिं तेथें विध अनेक ॥ जग सर्व पृथक पृथक ॥
देहिं देव देवांचे सम्यक ॥ पाहे निश्शंक पांडव तेव्हां ॥ २० ॥ १४ ॥

विस्मय पावोनि त्यानंतरें ॥ अर्जुन झाला रोमांचित शरीरें ॥
देवासि नमस्कारुनि शिरें ॥ कृतांजलि उत्तरें बोलियेला ॥ २१ ॥

अर्जुन उवाच ॥ १५ ॥

मग अर्जुन बोले उत्तर ॥ देहिं तुझिये देवासुर ॥
देख असे मीं आणि चराचर ॥ भूतें समग्र त्यांसहित ॥ २२ ॥

इश जो कां शंकर नामा ॥ तो आणि कमलासन ब्रह्मा ॥
ऋषी सर्वही दिव्य उरग संगमा ॥ मेघश्यामा लक्षीतसें ॥ २३ ॥ १६ ॥

अनेक बाहु अनेक उदर ॥ अनेक वदनें अनेक नेत्र ॥
पाहतों तुझीं रूपें सर्वत्र ॥ अनंत पार नाहिं जया ॥ २४ ॥

याचा सेवट मीं देखता नाहिं ॥ आदि मध्य न पडेचि ठाईं ॥
विश्वेश्वरा विश्वरूप तुझें पांहीं ॥ दिशा दाहीं त्रिलोकितसें ॥ २५ ॥ १७ ॥

किरीट गदा आणि चक्र ॥ तेजो राशी दीप्तिवंत सर्वत्र ॥
लक्षितों मीं तुझें रूप उग्र ॥ भयें नेत्र झांकती माझे ॥ २६ ॥

म्हणोनि तें न पाहवे मज ॥ अग्नि सूर्यापरिं दारुण तेज ॥
अप्रमेय पसरलें सहज ॥ बोलतां बोज न येचि शब्दां ॥ २७ ॥ १८ ॥

तुं अक्षर परम योग्य जाणावया ॥ अविनाश ब्रह्म म्हणति जया ॥
तुं परनिधान होसी विश्वा यया ॥ पावोनि लया तुज माजि येती ॥ २८ ॥

तूं अव्यय शाश्वत धर्म रक्षक ॥ सनातन पुरुष जगीं येक ॥
माझें मतें हा म्यां विवेक ॥ अति नेमक केला असे ॥ २९ ॥ १९ ॥

ज्या नाहिं आदि मध्य अंत ॥ अनंत वीर्या बाहु अनंत ॥
नेत्रस्थानीं शशि आदित्य ॥ तेजस्वी अत्यंत हुताशन जो ॥ ३० ॥

तो माझ्या आननी लक्षित ॥ स्वतेजें करुनि विश्व तप्त ॥
करित आहेसि देवा निश्चित ॥ व्यापिलें समस्त तुवां आंगें ॥ ३१ ॥ २० ॥

द्यावा पृथिवी माजिल पैस ॥ व्यापिलातां येकें दिशा अशेष ॥
पाहोनि अद्भुत रूपहें कर्कश ॥ व्यथा त्रैलोक्यास महात्म्या होते ॥ ३२ ॥ २१ ॥

हे महा असुराचे संघ तुज माजि ॥ प्रवेश करिताति सहजिं ॥
कोणिह भय भीत वक्ष रोजिं ॥ बद्धकर पंकजिं वर्णिताति ॥ ३३ ॥

महर्षि आणि सिद्ध संघ ॥ स्वस्ति वाक्यें बोलताति सुरंग ॥
स्तुतिनें स्तविताति अनेग ॥ तुज सांग जगदीशा ॥ ३४ ॥ २२ ॥

रुद्र आदित्य आणि वसव ॥ साध्य आश्विन विश्वेदेव ॥
मरुत पितर ऊष्मपादि सर्व ॥ आणि गन्धर्व गायक जे ॥ ३५ ॥

यक्ष त्रिदश सिद्ध समुदाव ॥ ऐसे हे पावोनि विस्मय भाव ॥
तुतें पाहताति शंकित जीव ॥ नवलाव मानुनि अती ॥ ३६ ॥ २३ ॥

महारूप तुझें विचित्र ॥ बहु वदनें बहु नेत्र ॥
महाबाहो बहु बाहुकर ॥ ऊरु अपार तैसेचि चरण ॥ ३७ ॥

